பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

14 05 2024 **TUESDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தேர்தலில் 7-ஆவது கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனு தாக்கல் இன்று மாலையுடன் முடிவடைந்தது.

2. நாடு முழுவதும் தேர்தல் நடத்தை விதிமீறல் தொடர்பாக, அளிக்கப்பட்ட 90 சதவீதம் புகார்களுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

3. இணையதள மோசடிகளிலிருந்து தற்காத்துக்கொள்ள பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

4. 77-ஆவது **Cannes** திரைப்பட விழா பிரான்ஸுல் இன்று தொடங்கியது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் தில்லி அணிக்கு எதிராக டாஸ் வென்ற லக்னோ அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

*----- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>>

மக்களவை 7ஆம் கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

மனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெறும். மனுக்களை விலக்கிக் கொள்ள வரும் வெள்ளிக்கிழமை கடைசி நாளாகும்.

7வது மற்றும் இறுதிக்கட்டமாக, 7 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 57 தொகுதிகளில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

உத்தரபிரதேசம் மற்றும் பஞ்சாபில் தலா 13 தொகுதிகளுக்கும், மேற்கு வங்கத்தில் 9 தொகுதிகளுக்கும், பீகாரில் 8 தொகுதிகளுக்கும், ஒடிசாவில் 6 தொகுதிகளுக்கும், ஹிமாச்சலப்பிரதேசத்தில் 4 தொகுதிகளுக்கும், ஜார்க்கண்டில் 3 தொகுதிகளுக்கும், சண்டிகரில் ஒரு தொகுதிக்கும் தேர்தல் நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் தேர்தல் நடத்தை விதிமீறல் தொடர்பாக, அளிக்கப்பட்ட 90 சதவீதம் புகார்களுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக, தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், காங்கிரஸ் மற்றும் பிஜேபி சார்பில் அளிக்கப்பட்ட ஒருசில முக்கிய புகார்கள் மட்டும் இன்னும் நிலுவையில் உள்ளதாக தெரிவிதுள்ளது.

பெரிய அளவிலான 425 புகார்கள் அளிக்கப்பட்டதாகவும், அதில் 400 புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வுகாணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் சார்பில் 170 புகார்களும், பிஜேபி சார்பில் 95 புகார்களும், இதர அங்கீகரிக்கப்பட் அரசியல் கட்சிகள் சார்பில் 160 புகார்களும் தாக்கல் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தை விதிகளை மீறிய அரசியல் கட்சித் தலைவர்களுக்கு தனித்தனியாக நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரில் தேர்தல் நடத்தை விதிமீறல் தொடர்பாக, 11 முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி திரு பாண்டுரங் கே போலே தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் 16-ஆம் தேதி முதல், 234 புகார்கள் வந்ததாகவும், அவற்றை ஆய்வு செய்தபின், 11 வழக்குகளை தேர்தல் நடத்தும் அதிகாரிகள் பதிவு செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

80 புகார்களுக்கு விளக்கம் கேட்டு, நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாக கூறிய அவர், 29 புகார்கள் மீது தேர்தல் ஆணையத்தின் விசாரணை தொடங்கியிருப்பதாகவும் ஜம்மு காஷ்மீர் தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

இணையதள மோசடிகளிலிருந்து தற்காத்துக்கொள்ள பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தேசிய இணையதள குற்றங்கள் தடுப்பு பிரிவின் தகவல் தளம் வாயிலாக மோசடி பேர்வழிகள் குறித்து ஏராளமான புகார்கள் வருவதாக தெரிவித்துள்ளது.

காவல்துறை மற்றும் சிபிஐ, போதைப்பொருள் தடுப்புப்பிரிவினர், இந்திய ரிசர்வ் வங்கி, அமலாக்கப்பிரிவு போன்ற அமைப்புகளின் பெயர்களை பயன்படுத்தி, இணையதளம் வாயிலாக பல்வேறு மோசடிகள் நடைபெறுவதாக புகார்கள் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு அதிகாரிகளைபோல, இணைய குற்றவாளிகள் செயல்படுவதாகவும், பொதுமக்களை மிரட்டுதல், பணம் பறித்தல் போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டு வருவது குறித்தும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குற்றவாளிகளிடம் பலர் தங்களது பணத்தை இழந்திருப்பதாகவும், எல்லை கடந்தும் இந்த குற்றங்கள் நிகழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று பாதிப்புக்கு உள்ளானோர் உடனடியாக தகவல் தெரிவித்தால், உள்துறை அமைச்சகம் விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக, 1 9 3 0 என்ற அவசர உதவி தொலைபேசி எண்ணை பயன்படுத்தலாம் என்றும், **cybercrime.gov.in** என்ற இணையதளத்தையும் பொதுமக்கள் பயன்படுத்தலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

உலக ஹைட்ரஜன் உச்சிமாநாட்டில் இந்தியாவின் பசுமை ஹைட்ரஜன் பயன்பாடு குறித்து விளக்கும் காட்சி அரங்கை மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறையின் செயலர் திரு பூபிந்தர் பல்லா தொடங்கிவைத்தார்.

நெதர்லாந்தின் **Rotterdam** நகரில் நடைபெற்றுவரும் இந்த உச்சிமாநாட்டில், பல்வேறு நாடுகளை சேர்ந்த 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டுள்ளனர்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம் தொடங்கப்பட்டதுமுதல், ஹைட்ரஜன் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை இந்த இயக்கம் மேற்கொண்டுள்ளது.

2030-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் ஹைட்ரஜன் உற்பத்தித்திறனை ஐந்து மில்லியன் டன்னாக உயர்த்த வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>>

77-ஆவது **Cannes** திரைப்பட விழா இன்று பிரான்ஸ் நாட்டின் **Cannes** நகரில் தொடங்கியது.

இவ்விழாவின் 12-ஆவது நிகழ்ச்சியாக இந்தியாவின் படைப்புகள் இடம்பெறுகின்றன.

மத்திய - மாநில அரசுகளின் பிரதிநிதிகள் மற்றும் இந்திய திரைப்படத்துறையை சேர்ந்தவர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர்.

குடியரசு தின விழா கொண்டாட்டங்களின் தொகுப்பான பாரத் பர்வ் இந்த திரைப்பட விழாவில் முதல் முறையாக இடம்பெறுகிறது.

இந்தியாவில் உள்ள திரைப்படத்துறையினரின் படைப்புகளை வெளியிடுவதற்காக பாரத் பெலியன் என்ற அரங்கமும் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் திரைப்படத்துறையை ஊக்குவிக்க புதிய சிந்தனைகளை கொண்டுவருதல், புதிய ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல், திரைப்பட வர்த்தகம், இணையதள கட்டமைப்பில் திரைப்பட கேளிக்கை நிகழ்ச்சிகளை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இந்தியாவின் சார்பில் இடம்பெறுகின்றன.

கோவாவில் இவ்வாண்டு நவம்பர் மாதம் 20-ஆம் தேதி தொடங்கவுள்ள 55-ஆவது சர்வதேச திரைப்பட விழாவுக்கான பதாகையும், முன்னோட்டமும் **Cannes** திரைப்பட விழாவில் வெளியிடப்படவுள்ளது.

<<<<<<>>>>>>

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் நிகழ்ந்த வன்முறை சம்பவங்களில் நான்கு பேர் உயிரிழந்தனர். 100-க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர்.

உயிரிழந்தவர்களில் இரண்டு பேர் பாகிஸ்தானிய படையினரின் துப்பாக்கிச்சூட்டில் பலியானதாக கூறப்படுகிறது.

இப்பணியின்போது பாகிஸ்தானின் காவல்துறை அதிகாரி ஒருவரும் உயிரிழந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல், இலவச மின்சாரம் மற்றும் கோதுமை மாவுக்கு மானியம் வழங்க வேண்டும் என கோரி அப்பகுதியில் உள்ள மக்கள் பாகிஸ்தான் அரசை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டம் வன்முறையாக மாறியதையடுத்து, காவல்துறையினர் தடியடி மற்றும் பல்வேறு தாக்குதலில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

வன்முறை அதிகமானதையடுத்து, 144 தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பள்ளி, கல்லூரிகள் மூடப்பட்டன.

பொது போக்குவரத்தும், வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டன.

தொலைத்தொடர்பு வசதியும் வன்முறை நடைபெற்ற இடங்களில் துண்டிக்கப்பட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக பாகிஸ்தான் நாட்டின் பொருளாதாரம் கடுமையான பின்னடைவை சந்தித்து வருகிறது.

எரிபொருட்களின் விலை கடுமையாக உயர்ந்ததால், அதிக அளவு பணவீக்கம், மிக குறைந்த அளவு பொருளாதார வளர்ச்சி போன்றவற்றால் பாகிஸ்தானின் பொருளாதாரம் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது.

நுகர்வோர் பணவீக்கம் கடந்த 2022-ஆம் ஆண்டு மே மாதத்தில், 20 சதவீதமாக இருந்தது.

ஆனால், தற்போது இது 38 சதவீதத்தை எட்டியுள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>>

எல் டி டி ஈ அமைப்பை மேலும் ஐந்தாண்டுகளுக்கு சட்டவிரோத அமைப்பாக தடை செய்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக, உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்தியாவின் இறையாண்மைக்கும், எல்லை பாதுகாப்பிற்கும் இந்த அமைப்பின் நடவடிக்கைகள் அச்சுறுத்தலாக இருக்கும் என கருதி இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல் டி டி இ-யின் பிரிவினைவாதம் மற்றும் அமைதிக்கு பாதிப்பு ஏற்படுத்துகின்ற நடவடிக்கைகள் இந்திய மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என கருதி, தடை நீட்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

நாட்டின் தென் பகுதியில் வரும் சனிக்கிழமை வரை நான்கு நாட்களுக்கு இடியுடன் கூடிய மழை மற்றும் சூறைக்காற்று வீச வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆங்காங்கே கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவித்துள்ளது.

நாட்டின் மத்திய மற்றும் கிழக்கு இந்திய பகுதிகளில் பெய்துவரும் மழை மற்றும் சூறைக்காற்றின் அளவு படிப்படியாக குறையக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரள மாநிலத்தில் இடுக்கி மற்றும் பத்தனம்திட்டா மாவட்டங்களில் ஆங்காங்கே கனமழையோ அல்லது மிக கனமழையோ பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இந்த இரு மாவட்டங்களுக்கும் மிக கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் மேலும் ஐந்து நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி இன்று லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

தில்லியில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில், டாஸ் வென்ற லக்னோ அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

------------

ரோமில் நடைபெறும் இத்தாலி ஓப்பன் டென்னிஸ் போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா – ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை தோல்வியடைந்தது.

<<<<<<END>>>>>>